நகராட்சி நிர்வாக ஆணையர் அலுவலகம், சேப்பாக்கம், சென்னை — 5.

ந.க.எண். 14981/93 அர்3 (215) (98) ~~(26)~~ நாள் 17.9.93

சுற்றறிக்கை

பொருள்: பேருந்து நிலைய கட்டணம் — நகராட்சி மற்றும் நகரியங்களிலுள்ள பேருந்து நிலையத்திற்குள் வந்து போகும் பேருந்துகளுக்குக் கட்டண வசூல் — திருத்தப்பட்ட கட்டணம் வசூல் செய்ய அறிவுரைகள் வழங்கல் சம்பந்தமாக.

பார்வை: 1. அரசாணை எண் 1147 உள்துறை (TR.VII) நாள் 26.7.93.

2. இவ்வலுவலக ந.க.எண். 1347/90 டிபி3 நாள் 23.8.93.

...

நகராட்சி மற்றும் நகரியங்களில் உள்ள பேருந்து நிலையங்களில் வந்து போகும் பேருந்துகளுக்கு கட்டணம் வசூல் செய்யும் தொகை, அரசு ஆணை 1147, உள்துறை (TR.VII) நாள் 26.7.93ல் திருத்தப்பட்டு ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. இவ்வரசாணை நகல் இவ்வலுவலக பார்வை இரண்டில் கண்டுள்ள கடிதத்தில் அனைத்து நகராட்சி ஆணையர் மற்றும் நிர்வாக அதிகாரி, மண்டல நகராட்சி நிர்வாக இயக்குநர்களுக்கும் அனுப்பப்பட்டுள்ளது.

மேற்படி அரசாணையில் கீழ்க்கண்டவாறு கட்டணம் திருத்தி அமைக்கப்பட்டுள்ளது.

| வகுப்பு | தற்போதைய கட்டணம் ரூ.பை. | திருத்தப்பட்ட கட்டணம். ரூ.பை. |
|---|---|---|
| 'ஏ' | 4.00 | 7.50 |
| 'பி' | 3.00 | 6.00 |
| 'சி' | 2.00 | 4.00 |
| 'டி' | 1.50 | 2.50 |

மேற்படி திருத்தப்பட்ட கட்டணத் தொகையை நகர்மன்றத்தில் வைத்து மன்ற தீர்மானம் நிறைவேற்றி அந்தத் தேதியிலிருந்து உயர்வு செய்த கட்டணம் வசூல் செய்ய நடவடிக்கை எடுக்க அனைத்து நகராட்சி ஆணையர்கள் மற்றும் நிர்வாக அதிகாரிகளுக்கு அறிவுரைகள் வழங்குமாறு அனைத்து மண்டல நகராட்சி நிர்வாக இயக்குநர்களும் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

பேருந்துக் கட்டணம் வசூலிக்கும் உரிமை குத்தகைக்கு விடப்பட்டிருந்தால் மேற்படி குத்தகைதாரருக்கு கட்டண உயர்வு விவரம் தெரிவித்து உயர்வு செய்யப்பட்ட கட்டணத்தை உடனடியாக வசூல் செய்யப்படவும், உயர்வு செய்யப்பட்ட கட்டண வித்தியாசத் தொகையை கட்டணம் வசூல் செய்யும் தேதியிலிருந்து குத்தகைதாரர் தினசரி வசூல் விவரத்தைக் காட்டும் பதிவேடு பராமரித்து அதனை நகராட்சியில்

தாக்கல் செய்து கருதல் கட் அந்தந்த நகராட்சிக்கு செலுத்த வேண்டும் என்றும், அவ்வாறு குத்தகை ... செலுத்தத் தவறும் பட்சத்தில் வித்தியாசத் தொகையை ... வசூலிப்பதுடன் குத்தகையை ரத்து செய்யப்படும் என குத்தகைதாரர்களுக்கு தெரிவிக்குமாறு அனைத்து நகராட்சி ஆணையர்கள் மற்றும் நிர்வாக அதிகாரிகளுக்கு அறிவுரைகள் வழங்க அனைத்து மண்டல நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களும் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

மேலும், அனைத்து மண்டல நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களும் அரசின் பார்வை ஒன்றில் கண்ட ஆணையில் தெரிவித்துள்ளபடி மாவட்ட அளவில் ஆய்வுக்குழு அமைக்க ஆவன செய்து அவ்வப்போது கூட்டம் நடத்தி பேருந்து நிலையங்களில் செய்ய வேண்டிய அபிவிருத்திகள் குறித்து விவாதித்து ஆவன செய்யுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

இச்சுற்றறிக்கை கிடைக்கப் பெற்றமைக்கு உடன் ஒப்புகைக் கேட்டுக் கொள்ளப்படுகிறது.

(ஒம்) டி.ஆர். கோபாலன்,
நகராட்சி நிர்வாக ஆணையருக்காக.

பெறுநர்

அனைத்து நகர்மன்ற ஆணையர்கள்,
நகரிய நிர்வாக அலுவலர்கள்.

அனைத்து மண்டல நகராட்சி நிர்வாக இயக்குநர்கள்.

நகல்: டி.1. பிரிவு கண்காணிப்பாளர்
மற்றும் டி13. உதவியாளர்.

உலக வங்கி பிரிவு கண்காணிப்பாளர் மற்றும்
உ.வ.2 உதவியாளர்.

இணை இயக்குநர் (உ.வ.),
துணை இயக்குநர்,
ஆர் 2 மற்றும் ஆர் 3.
இருப்புக் கோப்பு.

//ஆணைப்படி// அனுப்பப்படுகிறது//

கண்காணிப்பாளர் 21/9/93

21/9/93

ஆபு 21.9.